# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| 08 ஏப்ரல் 2018 | **இறை இரக்கம் ஞாயிறு** | இரண்டாம் ஆண்டு |




அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# உங்கள் சிந்தனைக்கு

அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

இன்றைய முதல் வாசகம் நம்பிக்கை கொண்ட தொடக்க காலத் திருச்சபையினரின் வாழ்க்கை முறையைப் பற்றியும், நற்செய்தி வாசகம், உயிர்த்த இயேசு பன்னிருவருக்கும் தோன்றி, அவர்களை உறுதிப்படுத்தி, அவர்களுக்குப் பாவ மன்னிப்புக்கான அதிகாரத்தை வழங்கியதைப் பற்றியும் எடுத்துரைக்கிறது. யூதர்களுக்கு அஞ்சி சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தனர். சீடர்கள் தங்கியிருந்த அறை, இயேசுவோடு கடைசி இரவு உணவு உண்ட அறையாக இருக்கலாம். அவர்கள் இருந்தது மேல் அறை. யூதர்களின் கோபம், வெறுப்பு முதலானவை சீடர்களுக்கு நன்றாகத் தெரியும். இயேசுவை ஒழித்தாயிற்று. இனி எப்படியும், அடுத்த இலக்கு தாங்கள்தான் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எந்த நேரமும் தலைமைச் சங்கக் காவலர்கள் வந்து தங்களைக் கைது செய்யலாம் என்று நினைத்தனர். எனவே, மேலறையிலிருந்து அவர்களுக்கு கேட்கும் ஒவ்வொரு சத்தமும், அவர்களின் இருதயத்தை கலங்கடித்துக் கொண்டிருந்தன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் உயிர்த்த இயேசு அவர்களுக்குத் தோன்றுகிறார்.

தொடக்க காலத் திருச்சபை மிகவும் ஆற்றலுடன் வளர்ச்சி அடைந்தது, பெருகிப் பலுகியது. அனைவரும் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புக்குச் சான்றுகளாக விளங்கினர். சிலுவையில் அறையப்பட்ட இயேசு உயிர்த்தெழுந்தார், தங்களோடு வாழ்கின்றார் என்பதனை அனைவரும் நம்பினர். அவ்வாறு நம்புவதற்கு சீடர்களின் வாழ்வு மிகப்பெரிய ஓர் ஆற்றலாக, ஆதாரமாக விளங்கியது.

நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறையைத் திருத்தூதர் பணிகள் நூல் இவ்வாறு சுருங்கத் தருகிறது:

1. அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாக இருந்தனர். (நம்பிக்கை)
2. அவர்களது உடமைகள் அனைத்தும் பொதுவாக இருந்தன. (பிறரன்பு)

அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாக இருந்தது அவர்களின் இறை நம்பிக்கையைக் குறிக்கிறது. அவர்களிடத்தில் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. எந்தவித பேதங்களும் இன்றி ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். இது பிறரின் கவனத்தை ஈர்த்தது. இரண்டாவதாக, அவர்கள் தன்னலம் துறந்து, பகிர்ந்து வாழ முன்வந்தனர். இதுவும் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பகிர்வைவிட மிகச் சிறந்த சான்றைக் காண இயலாது. இதுவே நம்பிக்கை கொண்டோரின் எண்ணிக்கை பெருகியதற்குக் காரணமாக அமைந்தது.

நமது வாழ்விலும் நமது செல்வம், பொருள், திறமைகள், ஆற்றல்கள் என கடவுள் கொடுத்த கொடைகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள முன்வருவோம். நல்வாழ்த்துக்கள்.

# தமிழ் மறைக்கல்வி வகுப்புகள்

இன்று முதல் தமிழில் மறைக்கல்வி வகுப்புகள் நமது ஆலயத்தில ஆரம்பமாகவிருக்கிறது. ஒவ்வொரு வாரமும் ஞாயிறு காலை 9:30 மணித் தமிழ் திருப்பலி முடிந்தவுடன் சுமார் 45 நிமிடங்களுக்கு மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறும். நம் பிள்ளைகளுக்கு நன்கு புரியும் வண்ணம் தினசரி செபங்களும், திருப்பலி செபங்களும், பாடங்களும், தமிழில் விளக்கிச் சொல்லித்தரப்பட்டு, புதுநன்மை மற்றும் உறுதிப்பூசுதல் பெற அவர்கள் தயாரிக்கப்படுவர். தமிழ் கத்தோலிக்கப் பெற்றொர்கள் அனைவரும் உங்கள் பிள்ளைகளை தகுந்த வகுப்புக்களில் உடனே பதிவு செய்யும்படி அன்புடன் வேண்டுகிறோம். நன்றி.

# முழு இரவுத் திருவிழிப்புச் செப வழிபாடு

**14-04-2018, சனி, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, நாம் சுமக்கும் பாரங்களை கடவுளிடம் இறக்கி வைத்து, அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

# இடைவிடா சகாய அன்னை நவநாள்

**சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு** தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.

## மறையுரைத் தொடர்: யார் இயேசு?

நமது பங்குத் தந்தையர் மூவரும் “யார் இயேசு” என்ற தலைப்பில் மறையுரைத் தொடர் ஒன்றைத் தொடங்கியுள்ளனர். இதன் அடுத்த அமர்வு **13-04-2018 (வெள்ளி), இரவு 7:45 மணிக்கு** நடைபெறும். ஆங்கிலத்தில் புகழ் ஆராதனை, மறையுரை, செப வழிபாடு கொண்ட இந்நிகழ்ச்சியில் கலந்து, பயனடைந்து, உங்கள் ஆன்மீக வாழ்வு செழிப்படைய அன்புடன் அழைக்கிறோம்.

## புனித வின்சென்ட் தே பவுல் காணிக்கை

கடந்த ஞாயிறு 01-04-2018 அன்று எடுக்கப்பட்ட காணிக்கையில் கிடைத்த மொத்தத் தொகை S$4,904.80
வசதியற்றோருக்கு வழங்கப்பட்ட தொகை S$5,740.00
மனமுவந்து கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி.

## ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணி

நாள்: 15-04-2018, ஞாயிறு மதியம் 2:30 மணி
ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம்
மதியம் 2:30 முதல் 4:00 மணி வரை மூடப்பட்டிருக்கும்.
நம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தத் தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| து | ந் | டி | தை | த் | ண | ண் | லெ | ல் | ந |
| டு | ல | ய | த | ழ் | உ | ள் | ள | மு | ம் |
| பே | த | வ | வெ | ட | யி | ஓ | ட் | கா | பி |
| வு | ர | டு | ற் | அ | ரு | பு | ம | பி | னா |
| ல | யா | ன் | றி | ல | மா | வே | று | சா | ய் |
| கு | தி | நூ | பு | னி | ய் | ஞா | ல் | த் | ரூ |
| பெ | மை | றை | ன் | சா | மை | வி | யூ | தே | யா |
| கே | அ | ம | க | த | லா | யா | ப் | லே | சி |
| க் | வ | டி | ட் | வி | வ | றை | லி | ற் | மெ |
| பா | கா | மே | ஒ | ள் | க | ளை | ட | ட் | க |

1. மக்கள் அனைவரும் ஒரே __________ ஒரே __________இருந்தனர்.
2. அனைவரும் மக்களின் __________ மிகுதியாகப் பெற்றிருந்தனர்.
3. என்றென்றும் உள்ளது அவரது __________.
4. இயேசுதான் __________ என்று நம்புவோர் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள்.
5. கடவுளின் __________ நமக்குச் சுமையாய் இருப்பதில்லை.
6. என்னைக் கண்டதால் __________. காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்.
7. அவர்கள் நடுவில் நின்று, ‘உங்களுக்கு __________ உரித்தாகுக!’ என்று வாழ்த்தினார்.
8. அவர் __________ என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்.

# ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| முதலாம் வாசகம்: | திருத்தூதர்பணிகள் 4 : 32 – 35 |
| பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 118 : 2-4, 13-15, 22-24 |
| பதிலுரை: ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர். என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு. | |
| இரண்டாம் வாசகம்: | 1 யோவான் 5 : 1 – 6 |
| நற்செய்தி வாழ்த்தொலி: அல்லேலூயா! அல்லேலூயா! ‘தோமா, என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்,’ என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா! | |
| நற்செய்தி வாசகம்: | யோவான் 20 : 19 – 31 |

# ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) : | மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

# ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 6:30 மணி<br>தொடர்ந்து திருப்பலி 7:30 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.